# சேர்வதற்கான விண்ணப்பம்

## கலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern இல் அங்கத்தவராவதற்கான விண்ணப்பம்

இத்தால் கலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern இல் உறுப்பினராகச் சேர்வதற்காக விண்ணப்பிக்கிறேன். இந்த விண்ணப்பமானது, சங்கத்தின் 10. தை 2023 யாப்பை அறிந்து மற்றும் அதை ஏற்றுக்கொண்டு விண்ணப்பிக்கப்படுகின்றது:

### 1. தனிப்பட்ட விபரங்கள்

தயவுசெய்து நீங்கள் பின்வரும் வெற்றிடங்களை பெரிய எழுத்துக்களில் நிரப்புங்கள். **<u>அவதானிக்கவும்:</u>** விண்ணப்பிக்கும் நபர் ஒருவருக்கு (1) ஒரு படிவத்தை நிரப்பவும். ஒரு விண்ணப்பப் படிவத்தில் பல நபர்களைக் குறிப்பிட்டிருந்தால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

☐ பெண் ☐ ஆண்

| | |
|---|---|
| முதற்பெயர் | |
| குடும்பப்பெயர் | |
| பிறந்ததிகதி | |
| மின்-அஞ்சல் | |
| தொலைபேசி இலக்கம் | |
| வீதி, வீட்டிலக்கம் | |
| நகரத் தபால் இலக்கம், நகரம் | |

## 2. அங்கத்தவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்

இந்த விண்ணப்பம் பின்வரும் உரிமைகள் மற்றும் கடமைகளைத் தெரிந்துகொண்டு மற்றும் ஏற்றுக்கொண்டு, அங்கத்தவராகச் சேர்வதற்குக் கோரிக்கை செய்யப்படுகின்றது.

| கடமைகள்: | விளக்கம்: |
|---|---|
| அங்கத்தவருக்கான கட்டணம் | அங்கத்தவரான நீங்கள், தை 2024 தொடக்கம் ஒரு வருடாந்த அங்கத்தவர் கட்டணமாக CHF 150.00 சுவிஸ் பிராங் செலுத்தக் கடமைப்பட்டுள்ளீர்கள்.<br><br>எச்சரிக்கை செய்திருந்தும் இரு (2) வருட காலத்துக்கு கட்டணம் செலுத்தத் தவறினால் சங்கத்திலிருந்து விலக்கப்படுவீர்கள். |
| நிர்வாக சபையின் ∴ நிகழ்வுகளுக்குப் பொறுப்பான நபர்களின் அறிவுறுத்தல்கள் | அங்கத்தவரான நீங்கள், நிர்வாக சபையின் வழிகாட்டுதல்கள் அத்துடன் நிகழ்வுகளுக்குப் பொறுப்பான நபரின் (களின்) அறிவுறுத்தல்களைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளீர்கள்.<br><br>இவற்றை மீறினால் சங்கத்திலிருந்து விலக்கப்படலாம். |
| சங்கத்தின் நலன்களைப் பாதுகாத்தல் | அங்கத்தவரான நீங்கள், சங்கத்தில் மரியாதையுடன் நடந்துகொள்வதுடன் சங்கத்தின் நலன்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள்.<br><br>இவற்றை மீறினால் சங்கத்திலிருந்து விலக்கப்படலாம். |

| உரிமைகள்: | விளக்கம்: |
|---|---|
| அங்கத்தவர்கள் ஒன்றுகூடலுக்கு அழைக்கப்படல் | அங்கத்தவரான உங்களுக்கு, அனைத்து அங்கத்தவர்கள் ஒன்றுகூடலிலும் பங்கேற்பதற்கு உரிமையுள்ளது. |
| அங்கத்தவர்கள் ஒன்றுகூடலில் வாக்களிப்பது | அங்கத்தவரான உங்களுக்கு, அங்கத்தவர்கள் ஒன்றுகூடலின்போது நிகழ்ச்சி நிரலின்படி கேட்கப்பட்டால் உங்கள் வாக்கை வழங்குவதற்கு உரிமையுள்ளது. |
| நிர்வாகசபை, கட்டிட நிர்வாகம், குருக்கள் மற்றும் கணக்காய்வாளர் பதவிகளுக்குப் போட்டியிடல் | அங்கத்தவரான உங்களுக்கு, எதிர்வரும் புதிய தேர்தல்களின்போது நிர்வாகசபை, கட்டிட நிர்வாகம், குருக்கள் மற்றும் கணக்காய்வாளர் போன்ற பதவி களில் வேட்பாளராக போட்டியிட உரிமையுள்ளது.<br><br>ஒவ்வொரு பதவிக்கும் உள்ள செயற்பாடுகள், உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த தகவல்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern இன் யாப்பில் நீங்கள் காணலாம். |

## 3. வேட்பாளர் மனு

ஒவ்வொரு பதவிக்கும் உள்ள செயற்பாடுகள், உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து மற்றும் ஏற்றுக்கொண்டு வேட்புமனுவைத் தாக்கல் செய்ய வேண்டும் (இதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern இன் 10. தை 2023 யாப்புடன் தொடர்பான கட்டுரைகளில் நீங்கள் காணலாம்).

நான் பின்வரும் பதவிக்கு ∴களுக்குப் போட்டியிடுகிறேன்:

| | |
|---|---|
| ☐ நிர்வாகசபை:<br>☐ தலைவர்<br>☐ உபதலைவர்<br>☐ பொருளாளர்<br>☐ செயலாளர்<br>☐ உபசெயலாளர்<br>☐ மதிப்பீட்டாளர் | ☐ கட்டிடநிர்வாகம்:<br>☐ தலைவர்<br>☐ உபதலைவர்<br>☐ பொருளாளர்<br>☐ செயலாளர்<br>☐ உபசெயலாளர்<br>☐ மதிப்பீட்டாளர் |
| ☐ குருக்கள் | ☐ கணக்காய்வாளர் |

நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள், எவர் ஒருவர் ஆலயக்குருவாக தேர்ந்தெடுப்பதற்கு தகுதியானவர் என்பதை 3. கார்த்திகை 2023 க்குள், தனது தகுதிபற்றிய மற்றும் ஐயராவதற்கான தனிப்பட்ட முன்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு போதியளவு ஆதாரங்களை வழங்கும் நபர்கள் மட்டுமே, அங்கத்தவர் கூட்டத்தில் குருக்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு நியமனம் பெறுவார்கள். பொறுப்பான விடய ஆய்வாளர்கள் இதைப் பரிசீலித்து, யார் இதில் வேட்பாளர்களாக தெரிவுசெய்ய தகுதியானவர்கள் யார் தகுதியற்றவர்கள் என முடிவுசெய்வார்கள். பொறுப்பான விடய ஆய்வாளர்கள் இதற்கு தகுதியானவர்கள் யாரென முடிவுசெய்கின்றார்களோ, அவர்களே இவ்வேலைக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

## 4. படிவத்தைத் திருப்பி அனுப்புதல்

**தயவுசெய்து மேலுள்ள விண்ணப்பப் படிவத்தை முழுவதுமாக நிரப்பி மற்றும் கையொப்பமிட்டு ஆகக் குறைந்தது 3. கார்த்திகை 2023 க்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்குத் திருப்பி அனுப்பிவைக்கவும்:**

Domenig & Partner Rechtsanwälte AG
z. Hd. Frau Edona Ademaj
Laupenstrasse 1
Postfach
3001 Bern

கேள்விகள் இருப்பின் Frau Edona Ademaj பதிலளிப்பார், மின்னஞ்சல் ஊடாக (ademaj@domenig.law) அல்லது தொலைபேசியில் (031 380 11 08) அழைக்கலாம். தயவுசெய்து கவனிக்கவும், Frau Ademaj பின்வரும் மொழிகளைப் பேசுவார்: டொச், ஆங்கிலம்.

## 5. கையொப்பம் (-கள்)

இதன்கீழ் கையொப்பமிடுவதன் மூலம் விண்ணப்பிக்கும் நபர், உறுப்பினராவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் சங்க யாப்பை வாசித்து விளங்கிக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றார். சிறுவயதானவர்களுக்கு அவர்களை சட்டரீதியாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு உரிமையுடைய ஒரு நபர் கையொப்பமிட வேண்டும்.

| நகரம், திகதி: | விண்ணப்பிக்கும் நபரின் கையொப்பம்: |
|---|---|
| ______________________________ | ______________________________ |

**சிறுவயதானவர்.׃.-களுக்கு விண்ணப்பிப்பவர்.׃.-கள்:**

| நகரம், திகதி: | சட்டரீதியாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு உரிமையுடைய ஒரு நபரின் கையொப்பம்: |
|---|---|
| ______________________________ | ______________________________ |